1982 மார்ச் 4]

பெருந்துறை காசநோய் மருத்துவமனை.

*வினா எண் 351.—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பிரிந்த பின்னும், பெருந்துறை காசநோய் மருத்துவமனை தலைவராக கோவை மாவட்ட ஆட்சித் தலைவரே இருப்ப தன் காரணம் என்ன ?

(ஆ) அது எப்போது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் கொண்டு வரப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் பிரிந்தபோது ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரை இதன் தலைவராக நியமனம் செய்யலாமா என்று காசநோய் சங்கத்தின் கவர்னிங் பாடி, ஆளுகைக் குழு கருதியது. ஆனால் இச்சங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் தற்பொழுது இருந்துவரும் நிலையே தொடரட்டும் என விரும்பிய காரணத்தினாலே இவரே தலைவராக தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறார்.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசநோய் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் ஒன்றாக இருந்த அந்தக் கோவை மாவட்டத்தில் அப்போது இருந்த தலைமையின் காரணமாக அந்தமாவட்ட ஆட்சித் தலைவரே தலைமைப் பொறுப்பில் இருந்தார். ஆனால், நிர்வாக சீர்திருத்தம் காரணமாக பிரிக்கப்பட்ட பின்பும் இந்த நிலை இருப்பது சரிதானா ? அதை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் பதில் சொல்லும்போது நான் இந்தப் பிரச்சினையை நன்கு விளக்கி இருக்கிறேன். Societies Registration Act 21 of 1960 என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தினால்தான் நாம் இதை மாற்றி அமைப்பதற்கான நிலை இருக்கின்றது. காரணம் பெரும்பாலான அளவில் இருக்கின்ற அந்த உறுப்பினர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரே அதன் தலைவராக இருக்கலாம் என்று விரும்பிய காரணத்தால் அதிலே ஒரு டெக்கினிக்கல் ரீசன் இருக்கின்ற காரணத்தாலே, இந்த நிலையில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சட்ட திட்டங்களை வைத்து பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் அன்றையதினம் அந்த கவர்னிங் பாடியிலே இருக்கக்கூடியவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக அத்தனை பேர்களும், ஏதோ தங்களுடைய வசதியின் காரணமாக பொழுது போக்குக்காக வந்து கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மை நிலையை ஆராய்ந்து அவர்கள் செயல்படும் நிலையில் இல்லாத காரணத்தால், இந்த சட்டத்திட்டங்களை மாற்றுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா ? என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் சொல்லக்கூடிய சட்டத்தை திருத்தக்கூடிய அந்த யோசனையை ஆராயலாம். ஆனால் அந்தக் காசநோய் மருத்துவ மனையிலே பணிகள் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கம் கூட அதை எடுத்துக் கொள்ளலாம் என்று யோசனை செய்தது. ஆனால், அங்கே பணிகள் நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்திற்காக அங்கே எந்தவிதமான மாறுதலும் ஏற்படுத்தவேண்டாம் என்று வைத்திருக்கிறோம். அது சிறிது நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்தப் பெருந்துறையிலே உள்ள காசநோய் மருத்துவமனை 40 ஆண்டுகளுக்கு முன்னாலே கோவை மாவட்டமும், பெரியார் மாவட்டமும் ஒன்றாக இருந்தபோது உருவாக்கப்பட்டது. கோவை மாநகராட்சி உட்பட, பல்வேறு ஸ்தாபனங்கள் அதற்கு ஏராளமான பணத்தை நன்கொடையாக இன்றைக்கும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் எப்படி மாறுவது என்பதைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால், அடுத்த மாவட்டத்திற்கு இது மாறி விட்டது என்பதனால், கோவை மாவட்டம் முழுவதுமே இன்றைக்கு வேறு காசநோய் மருத்துவமனை இல்லாத நிலையில் அங்கே கிடைக்கின்ற மருத்துவ வசதி, பெரியார் மாவட்டத்தில் அனைவருக்கும் கிடைக்கும்படி அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு அளிப்பாரா, அல்லது கோவை மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு காசநோய் மருத்துவமனையை உருவாக்கித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு சாதகமான ஒரு வினாவை எழுப்பி அதற்குப் பதில் கொடுக்கும் முறையில் அது அமைந்து உள்ளது. இரண்டு மாவட்டங்களுக்கும் பொதுவான இடமாக இருக்கட்டும் என்ற காரணத்திற்காகத்தான் அந்த கவர்னிங்பாடி உறுப்பினர்கள் பெரியார்

1982 மார்ச் 4]

மாவட்ட கலக்டர் தலைவராக இருக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை உறுப்பினர்களும் சேர்ந்து அப்படித் தேவையில்லை, இரண்டு மாவட்டத்திற்கும் பொதுவான இடமாக இருக்கட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது அங்கே இரண்டு மாவட்டங்களுக்கும் அது நன்றாக பணிசெய்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. துரைராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசநோய் ஆஸ்பிடல் ஆரம்பித்து 45 ஆண்டுகள் ஆகிவிட்டது. அது எந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நிலையில் தான் இன்றைக்கும் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது. அது விரிவுபடுத்தப்படவில்லை. தனியார் நடத்துவதால் நஷ்டம் ஏற்படுவதுடன், போதிய நிதி இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அதை அரசே ஏற்றுக்கொண்டு, அதை விரிவுப்படுத்தி, இன்னும் பெரிய அளவில் அதைச் செய்வதற்கு, அரசு முன் வருமா ? மேலும், பெருந்துறைக்கு அருகாமையில் அது இருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள சீதோஷ்ண நிலைமை இந்த காசநோயைப் போக்குவதற்கு பொருத்தமாக இருக்கிற காரணத்தால், அதை அரசே எடுத்துக் கொண்டு நடத்துவதற்குமுன் வருமா ? கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே மெடிகல் காலேஜ் ஆஸ்பிடல் பெரிய அளவில் இருப்பதால், பெரியார் மாவட்டம் போன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களில் இத்தகைய மருத்துவமனைகளை விஸ்தரிக்க முன்னுரிமை வழங்க அரசு முன் வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு அதிலே பொறுப்பு இருக்கிறது.

Annual expenditure of the above T.B. Sanitorium

16 லட்ச ரூபாய் ஒரு வருஷத்திற்குச் செலவாகிறது. அதற்கு வரக்கூடிய வருமானம் 13 லட்ச ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. அதற்கு இரண்டு லட்ச ரூபாய் அரசாங்கமே மானியமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. எல்லாக் காசநோய் மருத்துவ மனைகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால், அதிலே சங்கடம் வரும். எல்லா காசநோய் மருத்துவமனைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமானால் 50 லட்ச ரூபாய், 1 கோடி ரூபாய் செலவாகும். பல்வேறு மாவட்டங்களில் இந்த மாதிரியான காசநோய் மருத்துவமனைகள் இருக்கின்றன. இது கொள்கை ரீதியாகப் பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று. அது மட்டுமல்ல, தனியார்த்துறையில் மருத்துவமனைகள் துவங்குவதற்கு நாம் ஊக்கம் கொடுத்தால் தான் அது நல்ல பலன் தருவதாக இருக்கும்.

அந்த மருத்துவ மனைக்கு அண்மைக் காலத்தில், 6 மாதத்திற்கு முன்னால் நான் சென்று பார்வையிட்டு, சில யோசனைகளைத் தெரிவித்துவிட்டு வந்து இருக்கிறேன். அங்கேயிருக்கும் மருத்துவர்கள் நல்ல திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அதை மேலும் விரிவுப்படுத்த என்ன செய்யலாம் என்பது பற்றி பின்னர் பரிசீலிக்கலாம்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை காசநோய் மருத்துவமனை, அமைந்திருக்கிற இடம் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால், பெரியார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பது தான் பொருத்தமுடையதாகவும், நியாயமானதாகவும் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒன்று தான். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? நிர்வாகக் குழுவில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு உடன்பட வில்லை என்பதால் இப்படி வைத்திருக்கிறார்களோ என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் அதற்குத் தலைவராக இருப்பார் என்கிற வகையில் விதிமுறை களில் ஒரு எளிய திருத்தத்தின் மூலம் செய்து, அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய கேள்வியை ஏற்கனவே திரு. நல்லப்பன் அவர்களும் கேட்டார்கள், அந்த நேரத்தில் நான் அளித்த பதில் (Societies Registration Act 21 of 1960) அடிப்படையில் அதைத் திருத்தவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்களும் தெரிவித்த அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், அந்த யோசனையை அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Centralised purchase system for purchase of drugs.

* Q. 352—DR. K. P. RAMALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Whether there is any proposal for creating common centralised purchase system for purchasing Drugs and Medicines for the Government Hospitals and Dispensaries?

(*b*) If so, the details thereof?